## புதிய பல்கலைக்கழகங்கள் - கல்லூரிகள் - கல்விக் கட்டணச் சலுகைகள் என

# உயர்கல்வியில் தலைசிறந்த தமிழ்நாட்டைக் கட்டமைத்தவர் தலைவர் கலைஞர்!

## திருச்சி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவன பட்டமளிப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2025) சென்னை, மியூசிக் அகாடமியில் நடைபெற்ற பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் 33வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார். இவ்விழாவில், மருத்துவர் நா. எழிலன் எம்.எல்.ஏ., உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் தலைவர் திரு. ரவி அப்பாசாமி, நிர்வாகக் குழு உறுப்பினர் பாலபாஸ்கர், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் டாக்டர் ஜெய கிருஷ்ணா, முதுகலை துறை தலைவர் ராகவேந்திரா மற்றும் பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை, அக்.29-

**"புதிய பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், கல்விக் கட்டணச் சலுகைகள் என உயர்கல்வியில் தலைசிறந்த தமிழ்நாட்டைக் கட்டமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் 33-ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும்போது பெருமிதத்துடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2025) சென்னை, மியூசிக் அகாடமியில் நடைபெற்ற திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் 33வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு:-

பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கண்களில் கனவையும், இதயத்தில் இலட்சியத்தையும் சுமந்து இன்று பட்டம் பெற்றுள்ள மாணவ மாணவியர்களுக்கும், உங்களுடைய பெற்றோர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தலைசிறந்த கல்வியை வழங்கியிருக்கக் கூடிய தலைமைப் பண்புமிக்க மாணவர்களை உருவாக்கி வரக்கூடிய, இந்த பாரதிதாசன் மேலாண்மை நிறுவனத்தின் தலைவர், நிர்வாகத்தினர், பேராசிரியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

இங்கே பட்டம் பெற்ற மாணவர்களுக்கு உங்கள் வாழ்க்கையின் முக்கியமான நாள் இந்த நாள். அப்படிப்பட்ட நாளில் உங்கள் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் நானும் உங்களை வாழ்த்துவதில் மிகுந்த பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

### உழைப்பின் விளைச்சல்; திறமைக்கான அங்கீகாரம்!

உங்கள் கையில் இருக்கும் 'Degree' என்பது வெறும் பேப்பர் இல்லை! உங்களுடைய உழைப்பின் விளைச்சல்! உங்கள் அறிவுக்கான திறமைக்கான அங்கீகாரம்! இந்த நாள் உங்கள் குடும்பத்தின் பல தலைமுறை கண்ட கனவு, மெய்ப்படக்கூடிய நாளாக அமைந்திருக்கிறது! மதிப்புமிக்க பாரதிதாசன் கல்வி நிறுவனத்திலிருந்து நீங்கள் டிகிரி பெற்று இருக்கிறீர்கள்!

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்கீழ் மேலாண்மை பள்ளியாக 'BHEL' வளாகத்தில் நிறுவப்பட்ட பாரதிதாசன் மேலாண்மை நிறுவனம் இன்றைக்கு உலகப் புகழ்பெற்ற நிறுவனமாக விளங்கி வருகிறது. மேனேஜ்மெண்ட் சார்ந்த கல்வித் துறையில், இந்திய அளவில், தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பிடித்திருக்கிறது. இங்கு படித்த உங்களுடைய சீனியர்ஸ் எல்லாம், இப்போது, பல தொழில் நிறுவனங்களில், கல்வி மற்றும் சமூக துறைகளில் Top Positionல் இருக்கிறார்கள்! அந்த Listல் உங்கள் பெயரும் இடம்பெற வேண்டும். ஏன் நீங்கள் உருவாக்குகின்ற நிறுவனம் அந்த டாப் லிஸ்டில் வரவேண்டும்.

இந்த பாரதிதாசன் மேலாண்மை நிறுவனம் உங்களை மட்டும் Shape செய்யவில்லை. இங்கே வீடியோவில் வந்ததுபோல, தமிழ்நாடு முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம் மாநில திட்டக் குழு தமிழ்நாடு மின் ஆளுமை முகமை தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை C.M.D.A நீர்வளத் துறை என்று பல்வேறு அரசு துறைகளிலும் மேனேஜ்மெண்ட் பயிற்சி அளித்துக் கொண்டு வருகிறார்கள்.

### உயர் கல்வியில் சிறக்க திராவிட இயக்கமே காரணம்!

இந்தியாவிலேயே உயர்கல்வியில் விளங்கக்கூடிய சிறந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. உயர்கல்வி சேர்க்கை விகிதம், N.I.R.F. தரவரிசை என்று பல குறியீடுகள் அதற்கு சான்றாக இருக்கிறது. இப்படி உயர்கல்வியில் தமிழ்நாடு சிறக்க காரணம் யார்? ஒருகாலத்தில் கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களில் எல்லாம் இன்றைக்கு படித்து முன்னேறி, உலகம் முழுவதும் Top Positionல் இருக்கிறோம் என்றால், அதற்கு காரணம் யார்? திராவிட இயக்கம்!

இந்த அடித்தளத்தில், உயர்கல்வியில் தலைசிறந்த தமிழ்நாட்டை கட்டமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்! உயர்கல்விக்கு என்று ஏராளமான திட்டங்கள், கல்விக் கட்டணச் சலுகைகள், புதிய பல்கலைக்கழகங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகள் என்று உயர்கல்விக்காக அதிகமாக செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அதன் தொடர்ச்சியாகதான், நம்முடைய திராவிட மாடல் அரசும், ஏழை எளிய மாணவ மாணவியரும், உலக தரத்தில் கல்வி பெற வேண்டும் என்று, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் கல்லூரி படிக்கும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் தமிழ்ப் புதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்டம் படித்து முடித்ததும் உடனடியாக வேலைவாய்ப்புப் பெறுவதற்காக நான் முதல்வன் திட்டம் அறிவியல் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்கு முதலமைச்சரின் ஆய்வு திட்ட நிதி உதவி வசதி வாய்ப்பு இல்லாத வீட்டுப் பிள்ளைகளும், உலகின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் சேர வேண்டும் என்று மாதிரிப் பள்ளிகள், தகைசால் பள்ளிகள் என்று பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்!

> **நம்முடைய திராவிட மாடல் அரசும், ஏழை எளிய மாணவ மாணவியரும், உலக தரத்தில் கல்வி பெற வேண்டும் என்று, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் கல்லூரி படிக்கும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் தமிழ்ப் புதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்டம் படித்து முடித்ததும் உடனடியாக வேலைவாய்ப்புப் பெறுவதற்காக நான் முதல்வன் திட்டம் அறிவியல் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்கு முதலமைச்சரின் ஆய்வு திட்ட நிதி உதவி வசதி வாய்ப்பு இல்லாத வீட்டுப் பிள்ளைகளும், உலகின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் சேர வேண்டும் என்று மாதிரிப் பள்ளிகள், தகைசால் பள்ளிகள் என்று பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்!**

உலகம் எந்த வேகத்தில் மாற்றம் அடைகிறதோ, அந்த வேகத்திற்கு நாமும் ஈடுகொடுத்து ஓட வேண்டும்! கொஞ்சம் அசந்தாலும், 'Outdate' ஆகிவிடும் என்று சொல்லிவிடுவார்கள்.

### உங்கள் நேர்மைதான் அறிவை அளவிடும்!

அதேபோல், லீடர்ஷிப் என்றால், ஒருவர் வகிக்கக்கூடிய பதவியோ, அவர்கள் சம்பளமோ கிடையாது! அவர்கள் உருவாக்கும் பாசிட்டிவ் தாக்கம்தான்! இந்த ஏ.ஐ. காலத்தில், உங்களின் நேர்மைதான் உங்கள் அறிவை அளவிட உதவும்! வெற்றிக்கும் ஒழுக்கத்திற்கும் இடையே சமநிலை மிகவும் அவசியம்! எத்தனை மாற்றங்கள், வளர்ச்சிகள் வந்தாலும், சில Basics எப்போதும் மாறாது! அதில் நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும்!

இதற்காக பெரிய பெரிய புத்தகத்தையெல்லாம் படிக்க வேண்டும் என்று இல்லை. எல்லாவற்றிற்கும் பொருந்தும் அடிப்படையான மேனேஜ்மெண்ட் பாடங்கள் நம்முடைய திருக்குறளிலேயே நிறைய இருக்கிறது. எடுத்துக்காட்டுக்குச் சொல்ல வேண்டும் என்றால், அடுத்து நடக்கப் போவதை கணிக்கிறவர்கள் தான் எந்த துறையிலும் நிலைத்து நிற்க முடியும். அதைத்தான் "அறிவுடையார் ஆவது அறிவார்" என்று வள்ளுவர் சொல்கிறார். அந்த திறன் இல்லாதவர்கள் எதிர்பாராத ஒரு இடைஞ்சலுக்கே நம்பிக்கை இழந்து முடங்கிவிடுவார்கள்.

சாதக பாதகங்களை யோசிக்காமல், 'Proper Planning' இல்லாமல், எதிலும் இறங்கக் கூடாது என்பதை, "எண்ணித் துணிக கருமம்" என்று சொல்லி, வள்ளுவர் 'வார்னிங் கொடுக்கிறார். எவ்வளவு நல்ல ஐடியாவாக இருந்தாலும், 'டைமிங்' மிகவும் முக்கியம்! அதைத்தான் "காலம் அறிந்து கடிது செயல்வேண்டும்" என்று சொல்கிறார். அப்படி செயல்பட்டால் உலகத்தையே கூட வெல்லலாம்! சரியான ஆட்களை வைத்தால்தான், எந்த வேலையும் சரியாக நடக்கும் என்பதை, "இதனை இதனால் இவன்முடிக்கும்" என்ற குறளில் சொல்கிறார். இது எல்லாவற்றிற்கும் மேல், நாம் செய்யும் எந்தச் செயலிலும் அறம், வாய்மையை தவறவிடக் கூடாது என்று மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுகிறார்.

### வாழ்க்கைப் பாடங்களை எப்போதும் மறவாதீர்!

இந்த வாழ்க்கைப் பாடங்களை நீங்கள் ஒவ்வொருவரும் எப்போதும் மறக்காமல் இருக்க வேண்டும்! எப்படிப்பட்ட சோதனையான காலத்திலும், எந்த சூழலிலும் நேர்மை, நம்பிக்கை, பொறுப்பு இதுபோன்ற விழுமியங்களை கைவிடாதீர்கள். Long term இல் இவையெல்லாம்தான் உங்கள் வாழ்க்கையை உயர்த்த அடித்தளமாக இருக்கும். பாவேந்தர் அடிகளான "புதியதோர் உலகம் செய்வோம்" எனும் உங்கள் யுனிவர்சிட்டியின் Mottoவை நெஞ்சில் நிறுத்தி, எங்கு சென்றாலும், துணிச்சலாக, புதுமையாக, தெளிவாக, அதே நேரத்தில், அன்போடும் அறத்தோடும் செயல்படுங்கள்.

இன்றைக்கு நீங்கள் பட்டம் பெறுவது, கல்விக்கான கற்றலுக்கான ஒரு முடிவு கிடையாது! இன்னும் கற்றுக்கொள்வதற்கான புது தொடக்கம் இது! நீங்கள் எல்லோரும் நல்ல மனிதர்களாக வெற்றியாளர்களாக மாற்றத்தை உருவாக்கும் தலைவர்களாக வளர வேண்டும். நீங்கள் உயர உயர வளரும்போது, உங்களுக்கு கீழே இருப்பவர்களையும் நீங்கள்தான் கைதூக்கி விட வேண்டும்! இதுதான் உண்மையான Leadership Quality!

பாரதிதாசன் மேலாண்மை நிறுவனத்தின் 'Alumnus' என்ற அடையாளத்தின் அறிவு, மனிதநேயம், புதுமை மற்றும் சமூகப்பணி உணர்வை பிரதிபலிக்கும் Legacyயை நீங்கள் எட்டுத்திக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். இந்திய துணைக்கண்டத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, கடல் கடந்து வாழக்கூடிய வாணிபம் செய்த வரலாறும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கடல் கடந்து பல நாடுகளை வெற்றி கொண்ட வரலாறும் கொண்டது நம்முடைய தமிழினம்!

இன்றைய நவீன உலகத்தில் பல்வேறு பன்னாட்டுப் பெரு நிறுவனங்களின் C.E.Oக்களாக நீங்கள் வர வேண்டும்! பல புதிய நிறுவனங்களை உருவாக்க வேண்டும். அதுதான் என்னுடைய ஆசை, கனவு எல்லாம்!

பல Role Modelகளை பார்த்து வளர்ந்த நீங்கள், அடுத்து வர இருக்கும் பலருக்கும் Role Modelகளாக விளங்க, மீண்டும் ஒருமுறை உங்கள் எல்லோரையும் வாழ்த்தி, Dream big! Work hard! Be Kind and Simple!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அவர் தொகுதி மக்களுக்காக வாதாடுகின்ற, போராடுகின்ற அந்த காட்சிகள் எல்லாம் நான் பார்த்ததுண்டு.

இன்னொரு நிகழ்ச்சியை கூட நான் சொல்ல வேண்டும். ஒருமுறை சட்டமன்றத்தில் அன்றைக்கு அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த ராமகிருஷ்ணன் என்ற ஒரு அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கையை விவாதித்து அதற்கு பதில் சொல்கின்றபோது, அவர் பேசி முடித்ததற்கு பிறகு சில அறிவிப்புகளை வெளியிட்டார்.

அந்த அறிவிப்புக்களை வெளியிடுகின்ற போது, அதை முழுமையாக படித்தார். அப்படி படிக்கின்ற நேரத்தில், படித்து முடித்ததை மறுபடியும் படிக்க ஆரம்பித்தார். காரணம் என்னவென்று கேட்டால், அந்த அறிவிப்பின் பட்டியலை தட்டச்சு செய்தபோது, ஜெராக்ஸ் காப்பி எடுத்திருந்தார்கள். அந்த ஜெராக்ஸ் காப்பியையும் அவரிடம் வைத்து கொடுத்துவிட்டார்கள். அது அவருக்குத் தெரியாது. அதனால், பதட்டத்தோடு, அவர் படிக்கின்றபோது மறுபடியும் அதையே படிக்க ஆரம்பித்தார்.

### முதல்வர் கலைஞரின் நகைச்சுவை!

உடனே சொக்கர் அவர்கள் சட்டமன்றத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு, பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் படித்ததையே மறுபடியும் படிக்கின்றார் என்று சட்டமன்றத்தில் சொன்னார். உடனே முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் எழுந்து நானும் கவனித்தேன் - அவர் ஏன் படித்தார் என்றால், அவர் படிக்கின்றபோது நம்முடைய சொக்கர் அவர்கள் கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டு ஏதோ யோசித்துக் கொண்டிருந்தார். ஒருவேளை அயர்ந்து தூங்கிவிட்டாரோ என்று கருதி ஒருவேளை மறுபடியும் படித்திருப்பார். எனவே தவறாக நினைத்துவிட வேண்டாம் என்று சொல்லி, அதை சமாளித்து, ஒரு நகைச்சுவையான சம்பவத்தை அங்கு ஏற்படுத்தினார்கள்.

எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், அந்த அளவிற்கு கலைஞரிடத்தில் சொக்கர் உரிமையைப் பெற்றவர் - பாசத்தோடு பழகியவர் - என்னிடத்தில் பல நேரங்களில் பேசும்போதெல்லாம் சட்டமன்றத்தில் இப்படி எல்லாம் பேசவேண்டும் - எப்படிப்பட்ட கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும் - சட்டமன்ற உறுப்பினராக எப்படி எல்லாம் பணியாற்ற வேண்டும் என்று எனக்கே பல நேரங்களில் அவர் பாடம் நடத்தியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவர் கலைஞர் அவர்களின் கையால் முதன்முதலாக தமிழ்நாடு அரசின் காமராசர் விருதை நம்முடைய சொக்கருக்குத் தான் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்ந்தெடுத்து முதன்முதலாக அவர் வழங்கினார்.

அப்பாவுக்குத் தப்பாமல் பிறந்திருக்கக் கூடிய நம்முடைய அருமை சகோதரர் ஸ்ரீராஜா சொக்கர் அவர்களும், அதேபோல, காங்கிரஸ் பேரியக்கத்தில் இன்றைக்கு முக்கியத் தலைவராக அரசியலில் பயணித்துக் கொண்டிருக்கக் கூடியவராக அவர் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

மணமகனின் கொள்ளுத்தாத்தா மதிப்பிற்குரிய ராஜாக்கனி அவர்களும், நீதிக்கட்சியின் ஆதரவாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல, மணமகள் குடும்பத்தினருக்கும், நமக்கும் ஒரு நெருக்கமான உறவு இருக்கிறது என்று சொல்லலாம். எப்படியென்றால், காஞ்சிபுரத்தில் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களின் இல்லத்திற்கு எதிரில் தான் மணமகளின் தந்தை சரவணன் சந்திரசேகரன் அவர்கள் வீடு இருக்கிறது.

இப்படிப்பட்ட இந்த இரண்டு குடும்பங்கள் இன்றைக்கு அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கத்தில் நடைபெறும் இந்த இனிய மணவிழாவில் இணைவது உள்ளபடியே நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தந்து கொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் பேரியக்கமும் ஒரு காலத்தில், வெவ்வேறு பாதைகளில் பயணித்திருந்தாலும், இன்றைக்கு நாட்டின் நன்மைக்காகவும், நாட்டின் நலனுக்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், அதையும் தாண்டி இந்திய நாட்டின் ஒற்றுமைக்காகவும், ஒரே அணியில் அதே சிந்தனையுடன் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் குறிப்பிடத்தக்கது.

அதிலும், இன்றைக்கு காங்கிரஸ் கட்சியின் இளந்தலைவராக விளங்கிக் கொண்டிருக்கக் கூடிய நம்முடைய அருமை சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் தனிப்பட்ட முறையில் என் மீது காட்டுகின்ற அன்பை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது. "மற்ற அரசியல் கட்சித் தலைவர்களை எல்லாம் பேசுகின்ற போது, விளிக்கின்ற போது யாரையும் நான் சகோதரர் என்று சொன்னது கிடையாது; ஆனால், ராகுல் காந்தியை பற்றி மட்டும் நான் விளிக்கின்றபோது அருமை சகோதரர் என்று நான் சொல்வதுண்டு.

### அரசியல், நட்பு மட்டுமல்ல; கொள்கை உறவும் கூட!

காரணம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், அவர் என்னை அண்ணன், மூத்த அண்ணன் - எப்போது பார்த்தாலும், என்னிடம் ஃபோனில் பேசுகின்ற போதும் சரி - நேரடியாக பார்க்கும் போதும் மை டியர் பிரதர் என்று தான் சொல்வார். அதையெல்லாம் என்னால் மறக்க முடியாது. எதற்காக சொல்கிறேன் என்றால், இந்த அளவுக்கு அரசியல் நட்பு மட்டுமல்ல; கொள்கை உறவாகவும் வலுப்பெற்று, இந்தியாவின் குரலாக இன்றைக்கு எதிரொலித்துக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

இந்த உணர்வைதான் நாங்கள் எல்லோரிடமும் எதிர்பார்க்கிறோம். தனிமனிதர்களுடைய நலனைவிட நாட்டின் நலன்தான் முக்கியம் என்ற உணர்வோடு, அந்த நட்புணர்வு இன்றைக்கு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த இரண்டு அரசியல் இயக்கங்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கின்ற இந்தப் புரிதலும் கொள்கை உறவும் நிச்சயம் இந்த நாட்டின் எதிர்காலத்தைக் காப்பாற்றும். அது உறுதி.

இந்த மகிழ்ச்சியான நேரத்தில், நான் மணமக்களிடம் அன்போடு நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, மணமக்கள் தங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள் என்று நான் இந்த நேரத்தில், நான் பெற்றிருக்கக்கூடிய அந்த உரிமையோடு, அந்த குடும்பத்திற்கு என்னுடைய வேண்டுகோளாக வைத்து, மணமக்கள் அனைத்து நன்மைகளையும் பெற்று சிறப்புடன் வாழ்ந்திடவேண்டும்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் எடுத்துச் சொல்லியபடி, "வீட்டிற்கு விளக்காக நாட்டுக்குத் தொண்டர்களாக" இருந்து மணமக்கள் வாழ்க! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 38/சிபிடி, பேரவை இணைப்பு எண். 26) **வடசென்னை மின்திட்ட** நிர்வாகிகள் தேர்தல், கழகத்தின் தணிக்கைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் அ.சரவணன் அவர்களை மேலிடப் பார்வையாளராகவும், பேரவையின் இணைப் பொதுச்செயலாளர் ஜெ.விஜயகுமார் அவர்களை தேர்தல் ஆணையாளராகவும், பேரவைச் செயலாளர் என்.தனசேகரன் அவர்களை துணை தேர்தல் ஆணையாளராகவும் கொண்டும் நடத்தப்பட்டது. அதன்படி கீழ்க்கண்டவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று நிர்வாகிகளாக தேர்வு பெற்றுள்ளனர்.

**வடசென்னை மின் திட்டம்**

திட்டத் தலைவர் – M. நாகராஜ்
திட்ட துணைத் தலைவர்கள்–1)C. சிவப்பிரகாசம், 2) E. முனுசாமி, 3) A. ராஜேந்திரன்
திட்டச் செயலாளர்– K. சசிகுமார்
திட்ட துணைச் செயலாளர்கள்–1) R. சங்கர், 2) K. மாறன், 3) V. வேதமணி
திட்டப் பொருளாளர்– D. அருள்
கோட்டச் செயலாளர்கள்–1) A. பாபுராஜ் (மத்திய கோட்டம்), 2) S. தினேஷ்குமார் (வியாசர்பாடி), 3) R. ஜெகந்நாதன் (பொன்னேரி),4) A. ஹரிஷ்குமார் (பெரம்பூர்), M. இளங்கோவன் (தண்டையார் பேட்டை)

இடம்:கலைஞரகம்
நாள்:27.10.2025

**மு.சண்முகம், Ex.MP**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை